ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

प्रागेव त्वं यदि समसृजः स्थावरं मामिदानीं
माभूत् क्लेशो मम विलपनैस्तादृशैस्ते महेश ।
यस्मादेवं मतिलवयुतं चेतनं मां व्यतानीः
सोढ्वा सर्वं तदभिलषितं पूरय द्राक्कृपाब्धे ॥ १६ ॥

𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌤𑍍𑌵𑌂 𑌯𑌦𑌿 𑌸𑌮𑌸𑍃𑌜𑌃 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂 𑌮𑌾𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌂
𑌮𑌾𑌭𑍂𑌤𑍍 𑌕𑍍𑌲𑍇𑌶𑍋 𑌮𑌮 𑌵𑌿𑌲𑌪𑌨𑍈𑌸𑍍𑌤𑌾𑌦𑍃𑌶𑍈𑌸𑍍𑌤𑍇 𑌮𑌹𑍇𑌶 ।
𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌂 𑌮𑌤𑌿𑌲𑌵𑌯𑍁𑌤𑌂 𑌚𑍇𑌤𑌨𑌂 𑌮𑌾𑌂 𑌵𑍍𑌯𑌤𑌾𑌨𑍀𑌃
𑌸𑍋𑌢𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌦𑌭𑌿𑌲𑌷𑌿𑌤𑌂 𑌪𑍂𑌰𑌯 𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌕𑍃𑌪𑌾𑌬𑍍𑌧𑍇 ॥

ஹே பரமேசுவர! இவ்வுலகைச் சிருஷ்டிசெய்யும் காலத்திலேயே என்னையும் ஸ்தாவரம் என்று கூறப்பட்ட மரம், மலை, முதலியவைகளில் ஒன்றாக சிருஷ்டித்திருப்பீரேயாகில் ஸம்ஸாரக் கஷ்டங்களால் மிகவும் வருந்தும் என்னுடைய பலமான அழுகைகளால், இவன் நம்மை ஹிம்ஸிக்கிறானே என்கிற விஷயமான சிரமம் உமக்கு ஏற்படாது. அவ்விதமில்லாமல் அற்பபுத்தியுடன்கூடிய சேதநனாக என்னை சிருஷ்டித்தபடியால், இது துக்கம் இது சுகம் என்கிற அற்பப் பகுத்தறிவேற்பட்டு, அதிகம் கஷ்டம் வருங்கால் அதைப் போக்கவேண்டி உம்மை நிர்பந்திக்கும்படி நேருகிறது. ஆகையால் ஹே கருணைக் கடலே! என்னால் கொடுக்கப்படும் சகல கஷ்டங்களையும் ஸஹித்துக்கொண்டு, எனது இஷ்டத்தைச்சீக்கிரம் பூர்த்திசெய்யவேண்டும்.

ஒரு பக்தர் பகவானிடம் தம்மிடம் நீர் வருத்தப்படுவது நியாயமில்லை என்றும், அவச்யம் என் வேண்டுகோளை நீர் பூர்த்தி செய்தேதீரவேண்டும் என்றும், அது உமது கடமை என்றும் அறிவிக்கிறார்.

என்னை மானிடப் பிறவியாக நீர் சிருஷ்டித்து, உம்மிடம் வேண்டியதைக்கேட்கும்படி புத்தி சக்தியையும் கொடுத்திருப்பதால், எதைஅபேக்ஷித்தாலும் நாம் கொடுப்போமென்கிற அபிப்பிராயம் உமக்கு முந்தியே இருக்கவேணும். அவ்விதமில்லாவிட்டால் என்னை ஸ்தாவரமாக சிருஷ்டி செய்திருப்பீர். ஆகையால் எனக்கேற்பட்டிருக்கும் கஷ்டங்களை விலக்கி உத்தமமான உமது பாதாரவிந்த ஸேவையைக் கொடுத்து அனுக்ரஹிக்க வேண்டும்.

உபபத்திராதிபர்

ஆர்யதர்மம்.
விபவ-௵ ஆவணி-௴ ௧௫௨

# வேதாந்தஸாரஸங்கிரஹம்.

(374-வது பக்கத்தொடர்ச்சி.)

## அத்யாரோபம் என்றால் என்ன?

இப்புஷியில் வெள்ளியைப் போலவும், கயிற்றில் பாம்பைப் போலவும், பட்டமரத்தில் புருஷனைப்போலவும், அற்பம் கூடப் பிரபஞ்ச ஸம்பந்தமில்லாத சுத்தாத்ம வஸ்துவில் பிரபஞ்சத்தை ஆரோபிப்பதேயாகும்.

இந்த அத்யாரோபமானது வஸ்துவின் அக்ஞானத்தால் வருகின்றது. அந்த அக்ஞானம் தான் அவித்யா, தமஸ், மோஹம், மூலப்பிரகிருதி, பிரதானம், குணஸாம்யம், மாயா, அவ்யக்தம், என்று கூறப்படுகின்றது. மூலப்பிரகிருதி என்றால் வெளுப்பு, சிகப்பு, கறுப்பு, என்கிற இம்மூன்று வர்ணங்களுடன் கூடிய நூல்களால் முறுக்கப்பட்ட கயிறுபோல், ஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிற இம்மூன்று குணங்களுடைய ஸமுதாயரூபமாகும். இந்த மூலப்பிரகிருதிக்கு பிரளயமென்றும், மஹாசுஷுப்தி என்றும் பெயருண்டு. இதில் அனேககோடி ஜீவன்கள் தம்தம் கர்மவாசனையுடன் கூட அறக்குக் கட்டியில் ஸுவர்ண தூளிகள் போல் ஸிருஷ்டிக்குப் பூர்வகாலத்தில் மறைந்தவைகளாக இருக்கின்றன. இந்த அனுபவமானது ஸகல ஜனங்களுக்கும் ஸுஷுப்தி அவஸ்தையில் இருக்கின்றது. அந்த மூலப்பிரகிருதியானது ஸிருஷ்டி காலத்தில் பக்வத்தை அடைந்த ஜீவன்களுடைய கர்மவசத்தால் மாயை என்றும் அவித்யை என்றும் தாமஸீ என்றும் மூன்றுபிரகாரமாக ஆகிறது. இம்மூன்றுகளில் மாயை என்பது சுத்தமான ஸத்வ குணத்தைப் பிரதானமாகவுடையது. சிருஷ்டிக்கு பூர்வகாலத்தில் அந்த மாயையில் பிரதிபிம்பிதமான பிருமசைதன்யம் ஈசுவரன் என்று சொல்லப்படுகிறது. அந்த ஈசுவரனுக்கு

அவ்யாகிருதன் என்றும், அந்தர்யாமி என்றும் பெயர். அவன் தான் உலகங்களைச்சிருஷ்டிக்கிறவன். அந்த ஈசுவரனே பரிபூர்ண பிர்மசைதன்ய ரூபனாகவும், தமஸ்ஸால் குறுக்கப்பட்டவனாகவும் இருந்துகொண்டு ஜகத்திற்கு உபாதான காரணமாகிறான். பட்டு நூலுக்குஅந்தப்புழுவானதுபோல்பிர்மசைதன்யமும்தனக்குஉபாதியான மாயையைப்பிரதானமாகக்கொண்டு, உபாதானகாரணமாகின்றது. தன்னைப் பிரதானமாகக் கொண்டு நிமித்தகாரணமாகின்றது. ஆகையால் ஒரே வஸ்துவிற்கு இரண்டு காரணமும் ஸம்பவிக்குமாவென்கிற சங்கைக்கு இடமில்லை.

இந்த ஈசுவரன் உலகை எவ்விதம் சிருஷ்டிக்கிறார் என்பதையும் நிரூபிக்கிறோம்.

முன் சொல்லப்பட்ட அவித்யையானது ரஜோகுணத்தை பிரதானமாகக் கொண்டு அநேகப் பிரகாரமாயும், அனந்தமாயும் ஆகின்றது. அந்த அவித்தையில் பிரிதிபிம்பிதங்களான சைதன்ய ரூபங்களான ஜீவன்களும் அனந்தங்கள். இந்த ஜீவேசுவரர்களுக்கு வியஷ்டிரூபமான அவித்தையும், ஸமஷ்டிரூபமான மூலப் பிரகிருதியும் முறையே காரண சரீரங்கள். அந்தக்காரண சரீரங்களில் ஜீவனும் ஈசுவரனும் இருக்கும் ஸமயம், ஸுஷுப்தி அவஸ்தையாகும். அவ்விருவர்களுக்கும் தம் தம் 'காரண சரீரம்தான் ஆனந்தமயகோசமாகும். இவ்விதம் காரணப் பிரபஞ்ச சிருஷ்டி ஏற்படுகின்றது.

இனி ஸூக்ஷ்ம ஸிருஷ்டி கூறப்படுகின்றது.

ஈசுவரனுடைய பார்வையினால் தமோகுண ரூபமான பிரகிருதியானது ஆவரணசக்தி என்றும், விக்ஷேபசக்தி என்றும் இருவகையாகின்றது. இவ்விரண்டில் விக்ஷேப சக்திதான் ஸூக்ஷ்ம ஆகாயமாகின்றது. அந்த ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்தும் அக்னியும், அக்னியிலிருந்தும் ஜலமும், ஜலத்திலிருந்தும் பிருதிவியும் உண்டாகின்றது. இந்த பஞ்சபூதங்களுக்கும் ஸூக்ஷ்ம பூதங்களென்றும் அபஞ்சீகிருத பூதங்களென்றும், தன்மாத்திரைகளென்றும் பெயர். இந்த ஐந்துபூதங்களுக்கும் காரணபூதமான அக்ஞானத்திலிருந்தும் ஸத்வம்,ரஜஸ், தமஸ், என்கிற இம்மூன்று குணங்களும் ;வந்திருக்கின்றன. இந்த ஆகாசாதி பூதங்களுடைய ஒவ்வொன்றினுடைய ஸத்வ

குணம்சத்திலிருந்தும் சுரோத்திரம், த்வக், நேத்திரம், ஜிஹ்வா, கிராணம் என்கிற ஐந்து ஞானேந்திரியங்களும் கிரமமாக உண்டாகின்றன. ஆகாயம் முதலான பூதங்களுடைய ஸத்வ குணங்களின் சேர்க்கையால் அந்தக்கரணம் உண்டாயிருக்கின்றது. அந்த அந்தக்காணமும் மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் என்று நான்குவிதமாகின்றது. இவைகளில் புத்தியில் அஹங்காரத்திற்கும் மனதில் சித்தத்திற்கும் அந்தர்பாவம் அதாவது அதில் அடங்கியிருக்கின்றது இவ்விதமே ஆகாயம் முதலான பூதங்களுடைய ரஜோகுணும்சத்திலிருந்தும்கிரமமாக வாக்பாணிபாதம்பாயு உபஸ்தம் என்கிற இந்த ஐந்து கர்மேந்திரியங்கள் உண்டாகின்றன. ஆகாயாதி பூதங்களுடைய ரஜோகுணத்தின் சேர்க்கையால் பிராணன் உண்டாகிறுன். அவன் பிராணன், அபானன், வியானன், உதானம், ஸமானன், என்கிற பேதத்தால் ஐந்துவகை பிரிவை அடைகிறுன். இங்கு கூறப்பட்ட ஞானேந்திரியங்கள் 5 கர்மேந்திரியங்கள் 5. பிராணன் 5. மனஸ், புத்தி என்கிற இந்தப்பதினேழும் ஒன்ருகச் சேர்த்து வியவகரிக்கப்படும் ஸூக்ஷ்மசரீரமானது லிங்க சரீரமென்றும் சொல்லப்படுகின்றது. இந்த சரீரம் தான் போகஸாதனமாகின்றது. இந்த ஸூக்ஷ்மசரீரத்தில் ஜீவேசுவார்களிருக்கும் ஸமயம் ஸ்வப்நாவஸ்தையாகும். இதில் விக்ஞானமயகோசம், மனேமயகோசம், பிராணமயகோசம், என்கிற இம்மூன்று கோசங்களுமிருக்கின்றன. இவ்விதம் ஸூக்ஷ்மசிருஷ்டிப் பிரகாரம் நிரூபிக்கப்பட்டது. (தொடரும்.)

உபபத்திராதிபர்

---

# ஸ்திரீ சுவதந்திர விமரிசம்.

(320-வது பக்கத்தொடர்ச்சி)

மேலும் இந்த நூற்ருண்டில் ஹிமாலயம் முதல் ஸேதுவரையில் அனேகம் கீர்த்திவாய்ந்த லௌகிக பிரபுக்கள் தோன்றி புத்தி சாதுர்யத்தால் ஸகல சுருதி ஸ்மிருதி புராணங்களும் தத்காலத்திற்குக்கூடாதவையென்றும் கட்டுக்கதைகளடங்கியதென்றும், பத்திரிகைகளில் எழுதி ப்ரௌடா விவாகம், புனர்விவாகம் இன்னும்

அநேகம் திருத்தங்களைச் சட்டசபைகளில் கொண்டுவந்து ராஜாங்கத்தாரின் உத்தரவின்பேரில் நிறைவேற்றிச் சட்ட பூர்வமான தர்மசாஸ்திரமாக்கி கட்டுப்படாத பெரும்பாலரான ஸாதுக்களை தண்டனைக்குள்ளாக்குவதற்கும் துணிந்துவிட்டார்கள். அவர்கள் செய்துவரும் ஏற்பாடே இவர்களுக்குப் போதமானது. நம்முடைய தேசம், மதத்தையும் கற்பையும்; அதன்விசேஷ பலனையும் நெடுங்காலமாய் பிரஸித்தி பெறச்செய்திருக்கிறது. பண்டை காலத்தில் ஏற்பட்டுத் தற்காலம் நாடகரூபமாய்காண்பிக்கப்பட்டு வரும் கோவலன் சரித்திரமென்ன, தன் பாதிவ்ருத்யத்தால் இரும்புக்கடலையைப் பொரித்தருளிய அருந்ததிதேவியென்ன, மணல் குடத்தில் ஜலம் திரட்டிய ரேணுகா என்ன, ராக்ஷஸ பத்னியான மந்தோதரி என்ன, தன்னால் வரிக்கப்பட்ட பர்த்தா அல்ப்பாயுஸ்ஸுள்ளவரென்று நாரத மஹரிஷியால் தெரிந்தும் வரித்த பிறகு மாறுவதில்லையென்று ஒரே பிடிவாதமாய் ஸத்யவானை மணந்து அவன் கூடவே கஷ்டப்பட்டு பர்த்தாவின் பிராணனைக்கவரவந்த தர்மாராஜனைத்தன் பாதிவ்ரத்யத்தால் நேரில் பார்த்து அவன் அனுக்கிரகத்தால் புருஷனின் பெற்றோர்களுக்கு நேத்திரத்தையும் இழந்த ராஜ்யத்தையும் தீர்காயுளைத்தன் பர்த்தாவுக்கும் கிடைக்கப் பெற்ற ஸாவித்திரியென்ன, இன்னும்எத்தனையே பதிவ்ரதைகள் இவ்வுலகில் தோன்றி பிரசித்தியாயிருந்திருக்கிறார்கள். நம்முடைய ஸகல சாஸ்திரங்களும் ஸ்திரீகளின் பாதிவ்ரத்யத்தையே பிரதானமாகக்கொண்டது. அதிகம் எழுதினால் வெறுப்பாயும் விசாலமாயும் போய்க்கொண்டிருக்குமென்று சில திருஷ்டாந்தங்களை நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

अहल्या द्रौपदी सीता तारा मन्दोदरी तथा ।
पञ्चकन्याः स्मरेन्नित्यं महापातकनाशनम् ॥

𑌅𑌹𑌲𑍍𑌯𑌾 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍀 𑌸𑍀𑌤𑌾 𑌤𑌾𑌰𑌾 𑌮𑌨𑍍𑌦𑍋𑌦𑌰𑍀 𑌤𑌥𑌾 ।
𑌪𑌞𑍍𑌚𑌕𑌨𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑌰𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥

அகல்யை, துரௌபதி, ஸீதை, தாரை, மந்தோதரீ இந்த ஐந்து கன்னிகைகளையும் நினைத்தமாத்திரத்தில் மஹாபாதகங்கள் நசித்துவிடுமென்று சொல்லியிருக்கிறது. அப்படியிருந்தும் தாரை புத்திக்குறைவால் சொல்ப சுவதந்திரத்தை அடைந்ததும் தாரகாமயம் என்றும், பெரும் கொடிய போர் நடந்தது ஸகல புராணங்

களிலும் பிரஸித்தமாயிருக்கிறது. அநேகம் குடும்பங்களில் தன் புருஷனுக்கு உத்தியோகம் கிடைத்தவுடன் இதுவரையில் ரொம்ப கஷ்டப்பட்டு ஸ்வயபாஷையையும் அனுஷ்டானங்களையும் மறந்து படிக்கவைத்து விவாஹமும் செய்துவைத்த பெற்றோர்களையும் ஸஹோதரர்களையும் தபிக்கவிட்டுத் தனித்துவாழும் ஸ்திரீரத்தினங்கள் எண்ணிறந்தவை. இப்படிப்பட்ட சில பிள்ளைகளுக்குப் பெற்றோர்களின் உத்தரக்கிரியை நேருவதே ஸந்தேஹம். இது ஸ்வதந்திரமல்லவா? இவ்வளவு ஸ்வதந்திரம் இவர்களுக்குக் காணவில்லைபோலும். தசரதசக்கிரவர்த்தி கைகேயிக்கு இரண்டு வரத்தைக்கொடுத்துவிட்டுத் தள்ளாதகாலத்தில் ஸத்தியத்துக்குப் பயந்து, புத்திரசோகத்தால் தான் பிராணனை இழந்தும் பட்டணத்து ஜனங்கள் பட்டபாடும்ஸ்ரீமத்ராமாயணத்தால்தெரிந்ததே. ஜன்மம் எடுத்ததுமுதல் மரணபரியந்தம் ஸ்திரீகள் புருஷர்களின் தலைமேலேயே ஸர்வஸ்வதந்திரத்துடன் வசித்துப் பெருமையை அடைந்துவருகிறார்கள். எப்படிப்பட்ட முரட்டுகுணமுள்ளவனும், மஹாபண்டிதனும், ஸ்திரீகளின் சுவதந்திர வலையில் அகப்பட்டவனே. ஸ்திரீகளின் ஒவ்வொரு அங்கமும் தூர்த்தர்களின் பார்வைக்கும் வர்ணனைக்கும் இரைபோன்றவையாதலால் உத்தமமான குலஸ்திரீகளுக்கு சுவதந்தரம் என்பது கூடவே கூடாது.

सङ्गात् सञ्जायते कामः कामात् क्रोधः प्रवर्तते ।
क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ॥
स्मृतिभ्रंशात्बुद्धिनाशः बुद्धिनाशात् प्रणश्यति ॥

𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑍋𑌧𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌸𑌂𑌮𑍋𑌹𑌃 𑌸𑌂𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌃 ।
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌰𑌂𑌶𑌾𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 ।

ஸ்திரீகள் இந்த வசனத்தால் கூட்டத்தின் மத்தியிலும் போகக்கூடாது. இந்த வியாசத்தால் ஸ்திரீகளை நாம் தூஷித்து எழுதியதாக ஒவ்வொருவரும் அபிப்பிராயப்படக்கூடாது. பெருந்தன்யுள்ள ஸ்திரீகள் தங்கள் சரீர அமைப்பு கால நிலைமை சகலத்தையும் தீர்க்காலோசனைபண்ணி சுவயபாஷையைத் தாங்களும் அப்பியசித்து சிறுமிகளையும் அப்பியஸிக்கும்படி செய்து அதி லகுவான திருஷ்டியுள்ளவர்களின் வலைக்குள்ளகப்படாமல் பதி சுச்ரூ

ஷை, தெய்வபக்தி, புண்ணிய கதைகள் நிரம்பிய புஸ்தகங்களைப் படித்து அதன்படி நடந்து இந்த லோகத்தில் ஸகல போகங்களையும், மறுமையில் மோக்ஷத்தையும் அடையுமாறு ஸகலஸ்திரீகளையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

स्त्रैणं समस्तं विभवो रमायाः ।

ஸ்த்ரைணம் ஸமஸ்தம் விபவோ ரமாயா: ।

ஸ்திரீஜன்மம் பூராவும் லக்ஷ்மியின் அம்சமாகவே கூறப்பட்டிருக்கிறது. கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ள நான்கு அத்புதங்களில் ஸ்திரீகளின் கற்பு ஒன்று. சுவதந்தரத்தாலும் கூட்டத்தின் நடுவில் போவதாலும் கற்பு நிலைக்குமா? என்பதை நிதானித்து பார்க்கட்டும். முதியோர் மொழி

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம் கொடையார்
கண்ணீர்மை மாறாக்கருணையால் ——பெண்ணீர்மை
கற்பழியாவாற்றாற்கடல்சூழ்ந்தவைகத்
துள்ளற்புதமாமென்றே யறி

ஜலமானது தான் நிற்கும் மண் வேற்றுமையால் ருசிபேதத்தையும் மேலோர் குணமானது பாத்திரமறிந்து கொடுப்பதாலும் கண்ணானது அதிஜாக்கிரதையான இமைக்கொட்டாலும் பெண்களின் குணமானது கற்பான நடவடிக்கையாலும் விளங்குகிறது என்பது பொருள். முதல் மூன்று விஷயங்கள் நாளதுவரையில் ஒரேநிலையிலிருக்கும்போது ஸ்திரீகள் மாத்திரம் ஸ்வதந்திரத்தைக் கோறுவதால் கற்புக்கு ஆபத்துண்டாய் உலகம் அழிந்துவிடுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாங்கள் கோறும் ஸ்வதந்திரத்துக்கும் கற்புக்கும் என்ன ஸம்பந்தம்? என்று எண்ணக்கூடும். திரிகாணம் என்பது மனது, வாக்கு, சரீரம் எனப்படும் ஸ்வதந்திரத்தாலும் மீட்டிங்குக்குப் போவதாலும் பிசகு ஏற்படாமலிருக்குமாவென்பதைக் கவனிக்கவேண்டும். இத்துடன் இந்த விஷயதானத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

சுபம்!

தி. ந. தாததேசிகாசாரியார்.

# ஸ்நான பேதங்கள்.

1. முஸலஸ்நானம், 2. மலாபகர்ஷணஸ்நானம், 3. பாபப்ரச்சேதனஸ்நானம், 4. மந்திரஸ்நானம், 5. ஆக்கினேயஸ்நானம், 6. நித்யஸ்நானம், 7. நைமித்திகஸ்நானம், 8. காம்யஸ்நானம், 9. கிரியாங்கஸ்நானம், 10. ரோகமுக்திஸ்நானம், 11. ஆசௌசமுக்திஸ்நானம், 12. அபஸ்நானம், 13. சுத்தஸ்நானம், 14. மிருத்திகாஸ்நானம், 15. கோமயஸ்நானம், 16. தூர்வாஸ்நானம், 17. அப்பியங்கஸ்நானம், 18. நித்யாப்யங்கவிதி, 19. நவக்ரஹஸ்நானம், 20. ஓஷதீஸ்நானம், 21. ஆரோக்கியஸ்நானம், 22. திரிஷவணஸ்நானம், 23. அவபிருதஸ்நானம், 24. வைத்யசாஸ்திரரீதியாயுள்ள ஆதபஸ்நானம், 25. பாஷ்பஸ்நானம், 26 மானஸிகஸ்நானம் என்று ஸ்நானபேதங்கள் இருக்கின்றன.

இவைகளின் விபரங்களையும் முறையே நிரூபிக்கிறோம்.

பிராத:காலத்தில் தெரிந்தவனும் தெரியாதவனும் தன்சரீரத்தை சுத்திசெய்வதற்காக ஜலத்தில் இறங்கிநீராடவேண்டும்.

पुण्यपूतशरीरःस्यात् सततं स्नाननिर्मलः ।
तत्याज वृत्रहा स्नानात् पापं वृत्रवधार्जितम् ॥

புண்யபூதஶரீர:ஸ்யாத் ஸததம் ஸ்நாநநிர்மல: ।
தத்யாஜ வ்ருத்ரஹா ஸ்நாநாத் பாபம் வ்ருத்ரவதார்ஜிதம் ॥

(சாருசர்யா ஸ்ரீக்ஷேமேந்த்ர விரசிதம்)

பூர்வகாலத்தில் தேவேந்திரனுக்கு விருத்திராஸுர வதத்தால் வந்த பாபத்தைப்போக்குவதற்கு அசுவமேதயாகம் முதலியவை எவ்வளவோ செய்தும் தீராமல் கடைசியாய் ரிஷிகள் பிராதஸ்நானம் விதித்தார்கள். அந்த ஸ்நானம் செய்து, விருத்ரஹத்திபாபத்தில் இருந்தும் நீங்கினன்.

विधिस्नानेन मुक्तिस्स्यात् विपरीतेऽथ नाशनम् ।

விதிஸ்நாநேந முக்திஸ்ஸ்யாத் விபரீதேऽத நாஶநம் ।

1. ஸங்கல்பபுரஸ்ஸரமாய் செய்வது விதிஸ்நானம். தண்டாகாரமாய் ஜலத்தில் விழுந்து மூழ்குவது முஸலஸ்நானம், மொத்தமாய் ஸ்நானத்திற்கு பாபம் போக்கும் தன்மையுண்டு.

ஸ்நானம் முக்கியம் கௌணம் என இரண்டு பேதங்கள். அவை களின் பேதங்களாவன:—

2. சரீரத்தின் அழுக்குகளையொழிக்கவேண்டிச் செய்வது மலாபகர்ஷணஸ்நானம்.

3. செய்த பாபங்களைச்சொல்லி ஷெ பாபங்கள் நிவர்த்திக் காகச்செய்வது பாபாபனோதனஸ்நானம்.

4. அகமர்ஷண ஸூக்தம் முதலிய மந்திரங்களைச்சொல்லிச் செய்வது மந்திரஸ்நானம்,

5. ஸ்நானம் செய்யமுடியாத நிலைமையில் விபூதியால் சரீ ரத்தை அலங்காரம் செய்துகொள்வது, த்ரியம்பகாதி மந்திரங் களால் அந்தந்த அவயவங்களில் விபூதியைத் தரித்துக்கொள்வது ஆக்னேயஸ்நானம்.

6. ஜபாதிகார்யங்களைச் செய்யவேண்டி உதயத்தில் நித்தி யம் செய்யும் ஸ்நானம் நித்யஸ்ஞனம்.

7. சண்டாளன், பதிதன், பூத்தவள், பிரஸவித்தவள் இவர்களின் ஸாமீப்யஸம்பந்தாதிகளால் உண்டாகும் தீட்டை யொழிப்பதற்குக் கட்டின வஸ்திரத்துடன் செய்யும் ஸ்நானம் நைமித்திகஸ்நானம்.

8. பூசம், ஜன்மநக்ஷத்திரம், வைதிருதி அமாவாஸை, கார்த் திகை, அர்த்தோதயம் முதலிய புண்யகாலங்களில் கெங்கை, புஷ்கரக்ஷேத்திரம், சிவஸன்னிதி நதிகளில் ஸ்நானம்செய்தால் ஸகல பாபமும் தீரும் என்று ரிஷிகள் சொன்னகாம்யபலனை உத் தேசித்துச் செய்வது காம்யஸ்நானம்.

9. ஜபம் தேவபிதிருக்களுடைய ஆராதனம் இவைகளுக்கு அங்கமாகச் செய்வது, கிரியாங்கஸ்ஞனம்.

10. ஜ்வராதிகள் நிவர்த்தியாகி வைத்தியனால்விதிக்கப்பட்ட படி செய்வது ரோகமுக்த்திஸ்னனம்.

11. ஜாதாசௌச, மிருதாசௌச, நிவர்த்தி நாளில் செய் வது ஆசௌசமுக்த்திஸ்ஞனம்.

12. சரீர சௌக்கியத்தின்பொருட்டு சந்தனாதித் தைலம் முதலியவைகளால் செய்வது அப்பியங்கஸ்ஞனம்.

ஞாயிற்றுக்கிழமையில் அப்யங்கஸ்னானத்தால் ஸந்தானமும், திங்களில், சாந்திகுணமும், செவ்வாயில் அற்பாயுளும், புதனில் ஸம்பத்தும், வியாழனில் தாரித்திரியமும், வெள்ளியில் வ்யாதியும் சனியில் சகல பல ஸித்தியும் உண்டாகுமென்று சோதிட சாஸ்திரக்கருத்து. ஞாயர் திங்கள் கூடாதென்று சிலர் கருத்து.

स्त्रीतैलमधुमांसानि ये त्यजन्ति रवेर्दिने ।
न व्याधिश्शोकदारिद्र्यं सूर्यलोकं प्रयान्ति ते ॥

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌤𑍈𑌲𑌮𑌧𑍁𑌮𑌾𑌂𑌸𑌾𑌨𑌿 𑌯𑍇 𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌤𑌿 𑌰𑌵𑍇𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 ।
𑌨 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌶𑍍𑌶𑍋𑌕𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥

ஞாயிற்றுக்கிழமையில், தைலம், பெண், பானவஸ்துக்கள், மாம்சம் இவைகளை விட்டவர்கள், வியாதி துக்கம், தரித்திரம், இவைகளில்லாமல் கடைசியில் சூரியலோகமடைகிறார்கள்.

13. நித்யரோகாதிகளால் பீடிதர்கள். நித்தியம் தைல ஸேவனத்தால் குணமுண்டென்று வார விரதாதிகள் பாராமலே தினம் செய்துவரும் அப்பியங்கஸ்னானம் நித்யாம்யங்கவிதி என்பது பிரதமை, சதுர்த்தி, ஷஷ்டி; அஷ்டமி நவமி, சதுர்தசி, அமாவாசை, பர்வம், முதலிய நிஷித்த தினங்களில் எண்ணை யிட்டுக்கொண்டால் ஆயுளும் செல்வமும் அழிந்துவிடும். இந்த தினங்களில் க்ஷௌரமும், ஸ்திரீ நிஷேவணமும் கூடாது. நெய் ஆமணக்கு எண்ணையோடு சேர்த்துக் காய்ச்சின தைலமானால் எப்போதும் நன்மையைத்தரும். (யமஸ்மிருதி)

14. ஆசௌசாதிகளைக் கேட்டமாத்திரத்தில் செய்யும்ஸ்னானம் அபஸ்னானம்.

15. மனோவாக்காதிகளால் செய்யக் கூடிய சுத்திகளைச் செய்துதான் சுத்தனானதாக நினைத்துச்செய்வது சுத்தஸ்னானம்.

16. சுசியான மிருத்திகையை விதிப்படி அந்தந்த அங்கங்களில் மந்திரத்தைச் சொல்லி பூசிச் செய்வது மிருத்திகாஸ்னானம்

17. ஸ்மிருதி மந்திரங்களைச் சொல்லி கோமயத்தைச் சரீரத்தில் பூசிச்செய்வது, கோமயஸ்னானம்.

18. அருகம்புல்லு, அபாமார்க்க, ஸ்னானங்களுமுண்டு.

19. நவக்ராஹ ஸ்னானம்.

சூரியனுக்கு

मनःशिलैलासुरदारुकुंकुमैरुशीरयष्टीमधुपद्मकान्वितैः ।
सताम्रपुष्पैर्विषमे स्थिते रवौ शुभावहं स्नानमुदाहृतं बुधैः ॥

மநஶ்ஶிலைலாஸுரதாருகுங்குமைருஶீரயஷ்டீமது பத்மகாந்விதை꞉ । ஸதாம்ரபுஷ்பைர்விஷமே ஸ்திதே ரவௌ ஶுபாவஹம் ஸ்நாநமுதாஹ்ருதம் புதை꞉ ॥

மனோசிலை ஏலம், தேவதாரு, குங்குமப்பு, விலாமிச்சவேர், அதிமதுரம், தேன், தாமரைக்கிழங்கு, சிவந்த புஷ்பங்கள் இவைகளை ஜலத்தில் போட்டு வெந்நீரில் வைத்து ஸநானம் செய்ய, தசாபுக்தி, அந்தரம், சூட்சுமம், பிராணன், முதலியவைகளாலும் கோசாரீதியாலும் கெட்ட இடத்திலுள்ள சூர்யனால் உண்டாகும் தோஷம் நீங்கும் இதுபோல் ஒவ்வொரு கிரகத்திற்கும் காண்க. கும்ப ஜலத்தில் போட்டு அந்த கிரகமந்திரத்தால் மந்திரித்தும் ஸ்நானம் செய்யலாம். சிவந்த புஷ்பம் அரளி நீங்கலாக.

சந்திரனுக்கு

पञ्चगव्यगजदानविमिश्रैः शंखशुक्तिकुमुदैः स्फटिकैश्च ।
शीतरश्मिकृतवैकृतहन्तृ स्नानमेतदुदितं नृपतीनाम् ॥

பஞ்சகவ்யகஜதாநவிமிஶ்ரை꞉ ஶங்கஶுக்திகுமுதை꞉ ஸ்படிகைஶ்ச । ஶீதரஶ்மிக்ருதவைக்ருதஹந்த்ரு ஸ்நாநமேததுதிதம் ந்ருபதீநாம் ॥

பஞ்சகவ்யம், யானைமதம், சங்கு, முத்துச்சிப்பி, அல்லிப்பூ, ஸ்படிகம் இவைகள் சந்திரனுக்கு

குஜனுக்கு

बिल्वपञ्चकबलारुणपुष्पैः हिंगुकल्कफलिनी वकुलैश्च ।
स्नानमद्भिरिह मांसियुताभिः भौमदौस्थ्यविनिवारणमाह ॥

பில்வபஞ்சகபலாருணபுஷ்பை꞉ ஹிங்குகல்கபலிநீ வகுலைஶ்ச । ஸ்நாநமத்பிரிஹ மாம்ஸியுதாபி꞉ பௌமதௌஸ்த்ய விநிவாரணமாஹ ॥

பில்வமரத்தின் பஞ்சகம், வேர், இலை, பூ, காய், பட்டை, சித்தாமுட்டிவேர், பெருங்காயம், கடுக ரோகிணீ, வகுளம்பு, அல்லது இலை, ஜடாமாம்ஸி, இவைகள் குஜனுக்கு,

புதனுக்கு

गोमयाक्षतफलैस्ससरोजैः क्षौद्रशुक्तिनवमूलहेमभिः ।
स्नानमुक्तमिदमत्र भूभृतां बोधनाशु भविनाशनं बुधैः ॥

𑌗𑍋𑌮𑌯𑌾𑌕𑍍𑌷𑌤𑌫𑌲𑍈𑌸𑍍𑌸𑌸𑌰𑍋𑌜𑍈𑌃 𑌕𑍍𑌷𑍌𑌦𑍍𑌰𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌨𑌵
𑌮𑍂𑌲𑌹𑍇𑌮𑌭𑌿𑌃 । 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌦𑌮𑌤𑍍𑌰 𑌭𑍂𑌭𑍃𑌤𑌾𑌂 𑌬𑍋𑌧
𑌨𑌾𑌶𑍁 𑌭𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌂 𑌬𑍁𑌧𑍈𑌃 ॥

கோமயம், அக்ஷதை பழவர்க்கம், தாமரைப்பூ, தேன், முத்துச் சிப்பி, நவமூலம், தங்கம், இவைகள் புதனுக்கு.

வியாழனுக்கு,

मालतीकुसुमयुक्तसर्षपैः पल्लवैश्च मदयन्तिकोद्भवैः ।
क्षिप्रमम्बु मधुकेन च स्फुटं वैकृतं गुरुकृतं विनिहन्ति ॥

𑌮𑌾𑌲𑌤𑍀𑌕𑍁𑌸𑍁𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌷𑌪𑍈𑌃 𑌪𑌲𑍍𑌲𑌵𑍈𑌶𑍍𑌚 𑌮𑌦𑌯
𑌨𑍍𑌤𑌿𑌕𑍋𑌦𑍍𑌭𑌵𑍈𑌃 । 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑌮𑍍𑌬𑍁 𑌮𑌧𑍁𑌕𑍇𑌨 𑌚 𑌸𑍍𑌫𑍁𑌟𑌂 𑌵𑍈
𑌕𑍃𑌤𑌂 𑌗𑍁𑌰𑍁𑌕𑍃𑌤𑌂 𑌵𑌿𑌨𑌿𑌹𑌨𑍍𑌤𑌿 ॥

மல்லிகைப்பூ, வெண்கடுகு, மதயந்தி மரத்தின் துளிர், அதிமதுரம், இவை வியாழனுடைய திரவ்யம்.

சுக்கிரனுக்கு

एलया च शिलया समन्वितैः वारिभिस्सकलमूलकुंकुमैः ।
स्नानतो भृगुसुतोपपादितं दुःखमेति विलयं न संशयः ॥

𑌏𑌲𑌯𑌾 𑌚 𑌶𑌿𑌲𑌯𑌾 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑍈𑌃 𑌵𑌾𑌰𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑌕𑌲𑌮𑍂𑌲𑌕𑍁𑌂
𑌕𑍁𑌮𑍈𑌃 । 𑌸𑍍𑌨𑌾𑌨𑌤𑍋 𑌭𑍃𑌗𑍁𑌸𑍁𑌤𑍋𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 𑌦𑍁𑌃𑌖
𑌮𑍇𑌤𑌿 𑌵𑌿𑌲𑌯𑌂 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

ஏலம், மனோசிலை, கோரைக் கிழங்கு, ஸகலமூலம், குங்குமப்பூ ஸகலமூலம் நவமூலம் வைத்தியத்தில் பார்க்கவேணும்.

(தொடரும்)

பனையப்பட்டி, வேங்கடேசயயர்.